TNVR090001112021

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18–ஆம் நாள் திங்கள் கிழமை
இ.ம.எண். 1/2021
இன்
இந்து திருமண முதலேற்பு மனு எண்.23/2021

XXXXXXX ... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர்/

XXXXXXX ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 01.12.2023 அன்று இறுதியான விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. பாண்டி சுந்தர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. C. தங்கப்பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலைனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரருக்கும், அவரது இரு குழந்தைகளுக்கும் அடிப்படை தேவைகளான உணவு, உடை, மருத்துவம் படிப்புச்செலவு உள்ளிட்ட அனைத்து விதமான தேவைகளுக்குமான இடைக்கால ஜீவனாம்சமாக

மாதந்தோறும் ரூ.50,000/–மும், வழக்கு செலவு தொகையாக ரூ.25,000/–மும் வழங்க உத்தரவிடக் கோரி இந்து திருமணச் சட்டம் பிரிவு 24–ன் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுவின் சுருக்கம் :–**

இந்த மனுவின் மனுதாரர் அசல் மனுவின் எதிர்மனுதாரர். அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 22.11.2015–ஆம் தேதி விருதுநகர், ஸ்ரீலட்சுமி அம்மாள் திருமண மண்டபத்தில் வைத்து திருமணமும், இதர வைபவங்களும் நடைபெற்றது. திருமணத்திற்கு மனுதாரரின் பெற்றோர் மனுதாரருக்கு 30 பவுன் தங்க நகையும், எதிர்மனுதாரருக்கு 3 பவுன் தங்க நகையும், சகலவிதமான சீர் வரிசை பொருட்களையும் வாங்கி கொடுத்தனர். திருமணத்திற்கு பின் எதிர்மனுதாரர், மனுதாரரை ஒரு நல்ல மனைவியாக வைத்து வாழ்வார் என்றும், எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்றும் எதிர்கால வாழ்க்கையை ஆரம்பித்தார். ஆனால், சராசரி ஆண் மகனாக எதிர்மனுதாரரால் செயல்பட இயலவில்லை. தங்க நகைகள் உள்ளிட்ட சீர்வரிசை பொருட்கள் அனைத்தும் தற்சமயம் வரை எதிர்மனுதார் வசமே உள்ளது.

திருமணம் முடிந்த சில நாட்களில் எதிர்மனுதாரர், மனுதாரரின் முழு சம்பள பணத்தையும் கொடுக்குமாறு சண்டையிட்டார். மனுதாரர் திருமணத்திற்கு முன்பே ஆக்ஸிஸ் வங்கியில் ரூ.3 லட்சம் கடன் வாங்கியுள்ளார். மேற்படி கடன் தொகையை மனுதாரர் செலுத்தக்கூடாது, மனுதாரரின் தாயார் தான் செலுத்த வேண்டுமென்றும், எதிர்மனுதாரரும், அவரின் தாயாரும் 16.01.2016–ஆம் தேதி தகராறு செய்தனர். அதன்பின் எதிர்மனுதாரரிடம் சமரசம் பேச எதிர்மனுதாரரின் அண்ணன், அண்ணி, அவரின் தாயார் வசிக்கும் சென்னை முகவரிக்கு மனுதாரரின் தாயார் மற்றும்

தம்பி சென்றபோது, எதிர்மனுதாரரின் அண்ணி எதிர்மனுதாரர் எப்போதும் எங்கள் பேச்சை தான் கேட்பார். முடிந்தால் நீங்கள் மாற்றிக்கொள்ளுங்கள் என்று சவால் விட்டார். எதிர்மனுதாரர் அவரது அண்ணி பேச்சை கேட்டுக் கொண்டு மனுதாரரிடம் ஒரு ஆண் மகனாக நடந்து கொள்ளவில்லை.

மனுதாரரிடம், எதிர்மனுதாரர் திருமணத்தின்போது உனது அம்மா எனக்கு டுவீலர் வாங்கி கொடுக்கவில்லை, நீ வாங்கி கொடு என்று சண்டை செய்தார். மனுதாரர் அவரது வங்கி கணக்கிலிருந்து ரூ.67,000/- டுவீலர் வாங்க எதிர்மனுதாரர் வங்கி கணக்கிற்கு பணப்பரிமாற்றம் செய்தார். அதன்பின் கார் வாங்கி கொடு என்று சண்டை செய்தார். மனுதாரர் கல்யான கடனை அடைத்து விட்டு பார்க்கலாம் என்றவுடன், எதிர்மனுதாரர் வீட்டில் தனி அறையில் உறங்குவது, இரவு சுமார் 12.00 மணி போல் வருவது என்று வழக்கமாக வைத்திருந்தார். மனுதாரர், எதிர்மனுதாரரின் அண்ணியிடம் இது பற்றி கூற நீ சம்பள பணம் முழுதையும் தங்கள் வசம் கொடு, இல்லையென்றால் உனது கணவர் எங்கள் வீட்டில் தான் தங்குவார் என்று புண்படுத்தினார்.

மனுதாரர் 2018-ஆம் ஆண்டு மே மாதம் கர்ப்பம் அடைந்ததை எதிர்மனுதாரரிடம் தெரிவித்தார். இத தெரிந்து கொண்ட எதிர்மனுதாரரின் தாயார் மற்றும் அவரின் அண்ணி மனுதாரரை அலைபேசியில் தொடர்பு கொண்டு கர்ப்பத்தை கலைக்க சொன்னார்கள். உடல்நலக்குறைவான மனுதாரரின் தாயார் இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியிலும், மனுதாரரின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்ற ஒரே காரணத்தின் அடிப்படையில் மனுதாரரையும், கருவையும் பராமரித்தார். மனுதாரரின் வளைகாப்பு நிகழ்ச்சிக்கு எதிர்மனுதாரரின் வீட்டார்களிடம் தெரிவித்ததற்கு, எதிர்மனுதாரரின் அண்ணன் மண்டபத்தில் வைத்து தான் வைபவம் நடத்த வேண்டும், நாங்கள் வந்து செல்வதற்கு டிக்கெட் செலவு செய்ய வேண்டும்

என்று மனுதாரரிடம் சொன்னதன் பேரில் மனுதாரர் தான் செய்தார். எதிர்மனுதாரர் வீட்டார் அவர்கள் செய்ய வேண்டிய மாப்பிள்ளை வீட்டு சடங்குகளை செய்யாமல் வேண்டா வெறுப்பாக இருந்தனர்.

இரண்டு மாதம் கழித்து மனுதாரருக்கு பிரசவ வலி ஏற்பட்டு விருதுநகர் விஜயலட்சுமி மருத்துவமனையில் சேர்ந்தார். 10.01.2019–ஆம் தேதி சாய்ராம், சாய்வர்மன் என்ற இரட்டை ஆண் குழந்தை பிறந்தது. மனுதாரரின் அக்கா எதிர்மனுதாரரின் அம்மா, அண்ணன், அண்ணி ஆகியோர்களுக்கு மருத்துவமனையில் மனுதாரரை அனுமதித்ததும் தகவல் சொல்லியும் அவர்கள் வரவில்லை. எதிர்மனுதாரர் மறுநாள் மருத்துவமனை வந்து குழந்தையை பார்த்தார். அதன்பின் குழந்தைகளுக்கு புண்ணியதானம் செய்ய வேண்டும் என்று மனுதாரர், எதிர்மனுதாரர், அவரின் அம்மா, அண்ணன் மற்றும் அண்ணி ஆகியோர்களுக்கு தெரிவித்ததற்கு எதிர்மனுதாரர் மட்டுமே வந்தார். அதன்பின் குழந்தை பிறந்த 5 மாதம் முடிந்தும் மனுதாரரையும், இரு குழந்தைகளையும் அழைத்து செல்ல வரவில்லை. மனுதாரர், எதிர்மனுதாரரிடம் அழைத்து செல்லுமாறு தெரிவித்ததற்கு நீ உன் அம்மாவுடன் சென்னை வந்தால் வா, இல்லையென்றால் வடமலைக்குறிச்சியில் இருந்து விடு என்று தெரிவித்துள்ளார்.

குழந்தைகளுக்கு தலை மொட்டை போட வேண்டும் என்று மனுதாரர் அலைபேசியில் எதிர்மனுதாரர், அவரின் அண்ணன், அண்ணி, அம்மாவிடம் தெரிவித்ததற்கு சம்மதம் தெரிவித்தனர். அதன்பின் குழந்தைகளின் முதல் பிறந்த நாள் மனுதாரரின் அம்மா வீட்டில் கொண்டாடப்பட்டது. அந்த கொண்டாட்டத்தில் எதிர்மனுதாரர் பங்கேற்றார். அதன்பின் 07.02.2020–ஆம் தேதி மனுதாரரையும், இரு குழந்தைகளையும் மனுதாரரின் தாயாரையும், எதிர்மனுதாரர் சென்னை அழைத்து சென்று, அன்று இரவே மனுதாரரை எதிர்மனுதாரர் 3 மாதங்களில் வேலையை ராஜினாமா செய்ய வேண்டும்

இல்லை மனுதாரருடன் வாழ மாட்டேன் என்று மிரட்டினார்.

மனுதாரர் பலமுறை குழந்தைகளுக்கு பால் வாங்கி வரச்சொல்லியும் எதிர்மனுதாரர் கண்டு கொள்ளாமல் குழந்தைகளின் அழுகுரல் கேட்டும் ரூமில் படுத்து கொள்வார். மேலும், எதிர்மனுதாரரின் மாமியார் மனுதாரர் வேலைக்கு போகக்கூடாது. வேலைக்கு போகிற சாக்கில் பல ஆண் நபருடன் தொடர்பில் உள்ளதாக அசிங்கமாக பேசி, நீ சம்பாதிக்கும் காரணத்திற்காகத் தான் தனது மகனை திருமணம் செய்து வைத்ததாகவும், ஆனால், நீ வாங்குற சம்பள பணத்தினை என்னிடமோ, எனது மகனிடமோ கொடுக்கலை என்று திட்டினார். பின் எதிர்மனுதாரரின் தாயார் 2020–ஆம் ஆண்டு பிப்ரவரில் மாதம் இறுதியில் இரவு சுமார் 11.45 மணியளவில் வீட்டிலிருந்து மனுதாரர், அவரது தாயார் மற்றும் இரு குழந்தைகளுடன் வீட்டிலிருந்து வெளியே தள்ளி விட்டார்.

மனுதாரருக்கு தகப்பனார் கிடையாது, தாயாரும் மிகவும் வயதானவர். எதிர்மனுதாரர், மனுதாரரிடம் நல்லவராக நடந்து கொள்ளவில்லை. எதிர்மனுதாரரின் வீட்டார் மிகுந்த வசதி வாய்ப்பு படைத்தவர்கள் ஆவர். எதிர்மனுதாரரும் மென்பொருள் நிறுவனத்தில் Labour Meida Service Pvt Ltd, Senior Software Engineer ஆக பணியில் மாதம் ரூ.1,00,000/– வரை சம்பாதித்து வருகிறார். அந்த பணத்தை வைத்து தன்னிஷ்டம் போல் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். அதே சமயத்தில் பிப்ரவரி மாதம் 2020–ஆம் ஆண்டிலிருந்து மனுதாரரை புறக்கணித்து வாழ்ந்து வருகிறார். மனுதாரர் திருமணம் முடிந்த நாட்களில் இருந்து எதிர்மனுதாரர் வீட்டார் கொடுமையால் எதிர்மனுதாரர் வீட்டில் வாழ்ந்ததை விட தன் தாயார் வீட்டில் இரு குழந்தைகளுடன் பெற்றோர் தயவில் வாழ்ந்து வருகிறார்.

மனுதாரரும், அவரது இரு குழந்தைகளும், எதிர்மனுதாரரை பிரிந்து

வாழ்ந்து வரும் காலம் முழுவதும் மனுதாரருக்கும், இரு குழந்தைகளுக்கும் அடிப்படை தேவைகளான பால், உணவு, உடை, மருத்துவம், பள்ளி செலவுகள் உள்ளிட்ட அனைத்து விதமான தேவைகளுக்கும் பண ரீதியாக உதவி செய்ய வேண்டிய பொறுப்பும், கடமையும் எதிர்மனுதாரருக்கு உள்ளது. ஆனால், மேற்படி கடமையிலிருந்து வேண்டுமென்றே எதிர்மனுதாரர் தவறியுள்ளார். மேலும், மனுதாரர் மன உளைச்சல், மன வேதனைக்கு இழப்பீடு கோரி விருதுநகர், நீதிமன்றத்தில் குடும்ப வன்முறை சட்டத்தில் D.V.No.9/2021 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. ஆனால், மேற்படி வழக்கில் இடைக்கால ஜீவனாம்சமோ, தொடர் ஜீவனாம்சமோ கோரவில்லை. எனவே, மனுதாரருக்கும், இரு குழந்தைகளுக்கும் அடிப்படை தேவைகளான பால், உணவு, உடை, மருத்துவம், படிப்பு செலவு உள்ளிட்ட அனைத்து விதமான தேவைகளுக்காக மாதம் ரூ.50,000/-மும், வழக்கு செலவு தொகையாக ரூ.25,000/-மும் எதிர்மனுதாரர் கொடுக்க உத்தரவிட வேண்டி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம் :-</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கண்டுள்ள விசயங்களில் உண்மையென்றும், சரியென்றும் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொண்ட விசயங்கள் தவிர்த்து இதர விசயங்கள் யாவையும் மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரரின் மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. அது அப்படியே தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும். மனுவில் 3-ஆம் பாராவில் கூறியுள்ளபடி 22.11.2015-ஆம் தேதி எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது உண்மை. திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு 3 பவுன் தங்க நகை அணிவித்தனர் என்பது உண்மைக்கு புறம்பானது. மனுதாரருக்கு 30 பவுன் நகை போடப்பட்டதை எதிர்மனுதாரர் ஒரு நாளும் பார்த்தது இல்லை,

சீர்வரிசை எதுவும் மனுதாரருக்கு செய்யவில்லை. 30 பவுன் நகை பற்றி எதிர்மனுதாரர் கேட்டபோது மனுதாரர் அவரின் பெற்றோர் வீட்டில் உள்ளதாக கூறுவார். தற்போது மேற்படி தங்க நகைகள் அனைத்தும் மனுதாரர் வசமே உள்ளது.

மனுதாரர் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லாமல் எதிர்மனுதாரரின் அம்மா, அண்ணன், அண்ணியும் பேசும்போது அவர்களை அவமரியாதையாக பேசுவதும், எடுத்தெறிந்து பேசுவதும் மிகவும் கேவலமாக பேசியும் உள்ளார். எதிர்மனுதாரருக்கு இரு சக்கர வாகனம் வாங்கி கொடுத்தார் என்பதை அவரே நிரூபணம் செய்ய வேண்டும். எதிர்மனுதாரர் அவரின் அண்ணன், அண்ணியிடம் பேசினால் கூட அவர்களுடன் பேசக்கூடாது என்று மனதளவில் சித்ரவதை செய்துள்ளார். மனுதாரர் 2018–ல் கர்ப்பம் அடைந்ததை எதிர்மனுதாரரின் தாயார், அண்ணன், அண்ணி கர்ப்பத்தை கலைக்க சொன்னார்கள் என்பது பொய்யானதாகும். மனுதாரர் தான் கர்ப்பம் அடைந்த செய்தியை கேட்டு வந்த எதிர்மனுதாரரின் தாயார், அண்ணன், அண்ணியை தரக்குறைவாக பேசி கேவலப்படுத்தியுள்ளார். 2018–ஆம் வருடம் இறுதியில் மனுதாரர் அடம்பிடித்து அவரது பெற்றோர் வீட்டிற்கு வந்து விட்டார். வளைகாப்பு நிகழ்வினை மனுதாரரது வீட்டில் வைக்க வேண்டும் என்று அடம்பிடித்து நடத்தியுள்ளார். எதிர்மனுதாரருக்கும், அவரது குடும்பத்திற்கும் ஏதோ மூன்றாம் நிலை தரப்பினருக்கு சொல்வது போல் சொல்லியுள்ளார்கள். மனுதாரர், எதிர்மனுதாரரை அவமானப்படுத்தினாலும் எதிர்மனுதாரர், தனது மனைவியான மனுதாரரை குழந்தை பிறக்கும் இரு நாட்களுக்கு முன்பே வந்து கவனித்து மருத்துவ செலவுகளை பார்த்து கொண்டார். அந்த இரு நாட்களிலும் மனுதாரரின் தாயார், அக்கா, தம்பி ஆகியோர் எதிர்மனுதாரரை அவமானப்படுத்தும்படியாகவே நடந்து கொண்டனர்.

எதிர்மனுதாரரை தனது குழந்தைகளை பார்க்க விடாமல் அவமதித்தும்

தொடர்ந்து ஒரு வருடத்திற்கு மேலே மனுதாரர் அவரது தாயார் வீட்டில் இருந்து வந்தார். அழைத்ததற்கு தன்னால் தனது தாயாரை விட்டு வர முடியாது என்று கூறிவிட்டார். எதிர்மனுதாரர் தன்னால் முடிந்த வரை பேசி பார்த்தும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. 2018–ஆம் வருடம் முதல் மனுதாரர் தனது தாயார் வீட்டில் இருக்கக்கூடிய சூழ்நிலையில் 2020–ஆம் வருடம் பிப்ரவரி மாதம் இறுதியில் இரவு சுமார் 11.45 மணியளவில் எதிர்மனுதாரர், மனுதாரரை தனது வீட்டிலிருந்து எப்படி தள்ளிவிட முடியும். மனுதாரர் தன் மீது உள்ள தவறினை மறைக்க நடக்காத ஒன்றை நடந்தது போல் கூறியுள்ளார்.

எதிர்மனுதாரர் Labour Media Service Pvt. Ltd.,–ல் Senior Software Engineer ஆக பணியில் மாதம் ரூ.1,00,000/– வரை சம்பாதித்து வருவதை மனுதாரர் தான் நிரூபிக்க வேண்டும். எதிர்மனுதாரர் திருமணத்தின்போது பெங்களூரில் L & T Technology Services Privat Ltd., கம்பெனியில் பணிபுரிந்து வந்தார். திருமணத்திற்கு பின்பு மனுதாரருக்காக அந்த வேலையை விட்டு விட்டு மனுதாரர் சென்னையில் VERIZON INDIA PRIVATE LTD., என்ற நிறுவனத்தில் வேலை பார்த்ததால் சென்னையில் கிடைத்த வேலையை பார்த்து வந்தார். மனுதாரர் மாதம் ரூ.80,000/– சம்பளமாக பெற்று வந்தார். தற்போதும் அதே நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். எதிர்மனுதாரர் 2020–ல் கொரோனாவால் பாதிப்படைந்து பணிக்கு செல்லாமலும், மனுதாரரின் பிரிவால் மனதளவில் பெரும் பாதிப்படைந்தும் பெரும் இன்னல்கள் சந்தித்ததால் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் D.V.C.No. 9/2021 வழக்கினை எதிர்மனுதாரரின் தாயார், அண்ணன், அண்ணி மீது தொடர்ந்துள்ளதால் அவர்கள் எதிர்மனுதாரரை விட்டு விலகி உள்ளார்கள். எதிர்மனுதாரர் தனது அன்றாட வாழ்க்கை அத்தியாவசிய செலவுகளுக்கு மிகவும் சிரமப்பட்டு வாழ்ந்து வருகிறார்.

மனுதாரர் உணவு, உடை, மருத்துவம் பள்ளி செலவுகள் உள்ளிட்ட அனைத்து விதமான தேவைகளுக்கு யாரையும் நம்பி இருக்க வேண்டிய நிலையில் இல்லை. மனுதாரரின் வருமானத்திலும், அவரின் தாயாரின் பொருளாதார நிலையிலும் செல்வ செழிப்பாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார். எதிர்மனுதாரரிடமிருந்து பொருளாதார தேவைகளை பெற்று வாழ வேண்டிய அவசியம் மனுதாருக்கு இல்லை. எதிர்மனுதாரரிடம் தன்னை பராமரித்து கொள்ள இயலாத நிலையில் இருக்கும்போது, செல்வ செழிப்பில் இருக்கும் மனுதாரருக்கும், இரு குழந்தைகளுக்கும் மாதந்தோறும் பராமரிப்பு செலவிற்கும், வாழ்க்கை தொகை ரூ.50,000/- (Interim Maintenance) வழக்கு செலவு தொகை ரூ.25,000/- எப்படி கொடுக்க முடியும். எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

6. தற்போது மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

7. அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 22.11.2015-ஆம் தேதியன்று திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமண வாழ்க்கையின் பயனாக 10.01.2019-ஆம் தேதியன்று சாய்ராம் மற்றும் சாய்வர்மன் என்ற இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் வீட்டார் மிகுந்த வசதி வாய்ப்பு படைத்தவர்கள் என்றும், எதிர்மனுதாரர் மென்பொருள் நிறுவனத்தில் Labour Media Service Pvt. Ltd., Senior Software Engineer ஆக பணிபுரிந்து மாதம் ரூ.1,00,000/- வரை சம்பாதித்து

வருவதாகவும், அந்த பணத்தை வைத்து தன்னிஷ்டம் போல் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும், பிப்ரவரி 2020–ஆம் ஆண்டிலிருந்து மனுதாரரை புறக்கணித்து வாழ்ந்து வருவதாகவும், தனக்கு தகப்பனார் கிடையாது என்றும், தனது தாயார் மிகவும் வயதானவர் என்றும், தனது இரு குழந்தைகளுடன் தனது தாயார் வீட்டில் அவரது தயவில் வாழ்ந்து வருவதாகவும், எனவே, மனுதாரருக்கும், அவரது இரு பிள்ளைகளை பராமரிப்பதற்கும், படிப்பதற்கும், உணவு, உடை, இருப்பிடம், மருத்துவச்செலவு மற்றும் இன்னபிற அத்தியாவசிய தேவைகளுக்கும் ரூ.50,000/– வரை தேவைப்படுவதாகவும் கூறியுள்ளார்.

**8.** மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் திருமணம் நடந்ததையோ, குழந்தைகள் உள்ளதையோ மறுக்கவில்லை. எனவே, மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன், மனைவி என்பதும், அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்பதும் தெரிய வருகிறது. மேலும், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுதாரர், எதிர்மனுதாரரை அவமானப்படுத்தினாலும், எதிர்மனுதாரர் தனது மனைவியான மனுதாரரை குழந்தை பிறக்கும் இரு நாட்களுக்கு முன்பே வந்து மனுதாரரை கவனித்து மருத்துவ செலவுகளை பார்த்து கொண்டதாகவும், அந்த இரு நாட்களிலும் மனுதாரரின் தாயார், அக்கா, தம்பி ஆகியோர் எதிர்மனுதாரரை அவமானப்படுத்தும்படியாகவே நடந்து கொண்டதாகவும், எதிர்மனுதாரரை குழந்தைகளை பார்க்க விடாமல் அவமதித்தும் தொடர்ந்து ஒரு வருடத்திற்கு மேலே மனுதாரர் அவரது தாயார் வீட்டில் இருந்து வந்ததாகவும், அப்படியிருக்கும்போது 2020–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இறுதியில் இரவு சுமார் 11.45 மணியளவில் மனுதாரரை தனது வீட்டிலிருந்து எப்படி வெளியே தள்ளிவிட முடியும் என்றும், மனுதாரர் தன் மீதுள்ள தவறினை மறைக்க நடக்காத ஒன்றை நடந்ததுபோல் கூறி மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் வாதிடப்பட்டது.

**9.** மேலும், எதிர்மனுதாரர் திருமணத்தின்போது பெங்களூரில் L & T Technology Services Privated Ltd., கம்பெனியில் பணிபுரிந்து வந்ததாகவும், மனுதாரர் சென்னையில் VERIZON INDIA PRIVATED LTD., என்ற நிறுவனத்தில் வேலை பார்த்து மாதம் ரூ.80,000/– சம்பளம் பெற்று வருவதாகவும், திருமணத்திற்கு பிறகு மனுதாரருக்காக அந்த வேலையை விட்டுவிட்டு கிடைத்த வேலையை பார்த்து வந்ததாகவும், மனுதாரர் தற்போதும் அதே நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதாகவும், எதிர்மனுதாரர் 2020–ல் கொரோனாவால் பாதிக்கப்பட்டு பணிக்கு செல்லாமலும், மனுதாரரின் பிரிவால் மனதளவில் பெரும் பாதிப்படைந்தும், பெரும் இன்னல்களை சந்தித்ததால் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லியுள்ளார்.

**10.** மேலும், மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கடன் மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டில் எதிர்மனுதாரர் Lead Engineer – ஆக பணியாற்றுவதாகவும், மாதம் ரூ.90,000/– வருமானம் பெறுவதாகவும், மனுதாரருக்கும் அவரது இரு குழந்தைகளுக்கும் மாதம் ரூ.50,000/– பராமரிப்பு தொகையாக தேவைப்படுவதாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கடன் மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டில் எதிர்மனுதாரர் B.E., படித்துள்ளதாகவும், தான் வாங்கும் சம்பள பணம் போதுமானதாக இல்லாமல் வெளியில் கடன் வாங்கி தனது வயதான தாயாரை பராமரித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளாரே தவிர என்ன வேலை பார்க்கிறார், எவ்வளவு சம்பளம் பெறுகிறார் என்ற விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இல்லை என்றும் கூறியுள்ளார். எனவே, மேற்படி எதிர்மனுதாரர் வேலை பார்த்து வருகிறார் என்பதை மறைத்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

**11.** மேலும், மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கடன் மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டில் Verizon India Date Service Software Developer–

ஆக வேலை பார்த்து மாதம் ரூ.70,000/– பெற்று வருவதாக சொல்லியுள்ளார். எனவே, மேற்படி மனுதாரருக்கு அவரை பராமரிப்பதற்கு தேவையான சம்பளம் பெற்று வருகிறார் என்பது தெரிய வருகிறது. எனவே, அவருக்கு இடைக்கால ஜீவனாம்சம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், குழந்தைகளுக்கு தகப்பன் என்ற முறையில் எதிர்மனுதாரர் அவரது குழந்தைகளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், குழந்தைகளுக்கு தலா ரூ.5,000/– வீதம் ரூ.10,000/–த்தை இடைக்கால ஜீவனாம்சமாக ஒவ்வொரு ஆங்கில மாதமும் 10–ஆம் தேதிக்குள் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சமாக வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இந்த மனுவை பகுதியாக அனுமதித்து மனுதாரரின் இரு குழந்தைகளுக்கு தலா ரூ.5,000/– வீதம் ரூ.10,000/–த்தை இடைக்கால ஜீவனாம்சமாகவும் மற்றும் வழக்கின் செலவு தொகையாக ரூ.5,000/–மும் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும், இடைக்கால ஜீவனாம்சத் தொகையை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 10–ஆம் தேதிக்குள் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும், இடைக்கால ஜீவனாம்சத்தொகையை இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து அசல் மனு முடியும் வரை செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18–ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

**இல்லை**

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

**சார்பு நீதிபதி,**
**விருதுநகர்.**

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.1/2021 இன்
இ.தி.மு.ம.எண்.23/2021
உத்தரவு
நாள். 18.12.2023